**செ. கு. எண்: 060** **நாள்: 26.06.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – **26.6.2019**

---

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மத்திய அரசின் முன்னாள் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் பணியாற்றிய திரு. ஜி. கே வாசன் அவர்களின் அன்பு தாயார் திருமதி கஸ்தூரி மூப்பனார் அவர்கள் இன்று **(26.6.2019)** உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

திருமதி கஸ்தூரி மூப்பனார் அவர்கள், திரு. ஜி.கே வாசன் அவர்களுக்கு நல்லதொரு தாயாகவும், பக்கபலமாகவும் திகழ்ந்தவர். திருமதி கஸ்தூரி மூப்பனார் அவர்களின் மறைவு, அவருடைய குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

அன்னாரை இழந்து வாடும் திரு. ஜி.கே வாசன் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**